[1979 மார்ச் 6]

தாம்பரபரணியின் குறுக்கே பாலம்

*வினா எண். 247—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தாம்பரபரணி நதியில் சொரிமுத்தையனார் கோவில் பக்கம் கட்டப்படும் பால வேலையின் மதிப்பீடு எவ்வளவு ?

(ஆ) பாலம் கட்டும் வேலை எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ரூ. 3·00 இலட்சம்.

(ஆ) 1978-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31-ம் நாளன்றே வேலை முடிவடைந்து விட்டது.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களின் பதிலுக்கு நன்றி.

மூடப்பட்ட பஞ்சாலைகள்.

*வினா எண். 248— திரு. ஆர். மணிமாறன் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971 ஆம் ஆண்டிலிருந்து 1975 ஆம் ஆண்டு முடிய தமிழகத்தில் மூடப்பட்ட பஞ்சாலைகள் எத்தனை?

(ஆ) அவைகளில் திறக்கப்பட்டவை எத்தனை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஐந்து.

(ஆ) ஐந்து.

மீனாட்சி மில் தொழிலாளர்களுக்கு மிகை ஊதியம்

*வினா எண். 249—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மீனாட்சி மில் நிர்வாகம் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்குவதிலிருந்து விதிவிலக்குக் கோரியுள்ளது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்துள்ள முடிவு யாது?

[1979 மார்ச் 6

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம். மதுரை ஸ்ரீ மீனாட்சி மில் நிர்வாகத்தினர் தொழிலாளர்களுக்கு 1976–77-ஆம் ஆண்டிற்கான போனஸ் வழங்குவதிலிருந்து விலக்கு அளிக்கும்படி கோரி மனு அனுப்பி யிருந்தனர்.

(ஆ) அரசு அம்மனுவினைப் பரிசீலித்து போனஸ் வழங்குவதிலிருந்து விலக்கு அளிக்க இயலாது என, மதுரை ஸ்ரீமீனாட்சி மில் நிர்வாகத்திற்கு 1978-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 28-ம் நாளன்று தெரியப்படுத்தியது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர வர்களே, அந்த ஆண்டிலே அந்த மனு நிராகரிக்கப்பட்டதற்கு அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குப் பிறகு இந்த ஆண்டும் விதிவிலக்கு வேண்டும் என்று மனு செய்திருக்கிறார்கள், அதையும் அரசு நிராகரிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு விதிவிலக்கு கோரி மனு வரவில்லை. இந்த அரசினுடைய கொள்கையே எந்த நிறுவனம் விதிவிலக்கு வேண்டுமென்று கேட்டாலும் கொடுப்பதில்லை என்று முடிவெடுத்திருப்பதாகும். ஆகவே கொடுக்க மாட்டோம், கொடுத்ததில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். லட்சுமிநாராயணன் : பேரவைத் தலைவர வர்களே, இந்த ஆண்டு தொழிலாளர்கள் மீனாட்சி மில் நிறுவனத்தினரிடமிருந்து கோரிய போனஸ் தொகை எவ்வளவு? அவர்கள் பெற்ற போனஸ் எவ்வளவு என்பதைத் தெரிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இதற்கு தனிக்கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளாற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண். 250—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடலூர் சிதம்பரம் நெடுஞ்சாலையில் வெள்ளாற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற் குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.